4

உ

முருகன் றுணை

வள்ளி தெய்வானை ஏசல்.

# சுப்பிரமணியர் தியானம்.

OFFICE OF ... MADRAS
3- JAN 1921



மதுரை வடுகக்காவல் கூடத்தெரு
S. வேணுகோபால் நாயுடு.
அவர்களால்,

...க்கு மாசிவீதி
...ஜியந்திரசாலையில்
...ற்றது.

Q26:417
N21
175983

கடவுள் துணை.

ஆதி மூல மான எந்தன் அம்பிகை பாலா
ஜோதி ரூப மான சுப்பிர மண்ய வேலா. 1

பச்சை மயில் மீதிலேறிப் பாராயென்னை
இச்சை யுடனே பணிந்தேன் நாளாயுன்னை 2

வெம்பினே னுன்னையே எண்ணிவீர சூரா
நம்பி தன்னையே கடைக்கண் பாராய் வீரா. 3

---

ஆநந்தபைரவி.

பல்லவி.

குறப்பெண்ணை மணஞ்செய்த குமரகுருபரனே
பிறவாத வரமருள்வாய் (குறப்)

அநுபல்லவி.

ஈராறு புயங்கொண்டாய் ஓராறு முகங்கொண்டாய்
பேரான குன்றக்குடி சீராயமர்ந்த வேலா (குறப்)

சரணம்.

தென்பரங் குன்றினில் வாழ்தெய்வானைமகிழ் லோலா
அன்பன் நம்பிதன்னை ஆதரித்தருள வேலா
தொண்டர் துயர்தன்னைத் தீர்த்த அநுகூலா
கண்டால் வினையகலும் காருண்யமான சீலா
தீரனே மயில்வீரனே திருச்செந்தூர் வாழ்
முருகோனே (குறப்

5
OFFICE OF ... 3- JAN 1921 ... MADRAS

உ
முருகன் துணை.

# சுப்பிரமணியர் தியானம்.

(விடமாட்டேன் வுன்னை என்ற மெட்டு)

ஆண்டிப் பண்டாரம் உனை
வேண்டிக் கொண்டேனே

தண்டாயுதை முகனே
சாமிசரவ ணனே
அண்டாதிதேவர் போற்றும்
ஆறுமுகமாய் விளங்கும் ஆண்டி

பாததரி சனமே
பார்க்கப் பழனிமலை
காதலாய் ஓடிவந்தேன்
கால்வலியைத் தீர்த்திடுவாய் ஆண்டி

பஞ்சவர்க்கு தூதுசென்ற
பரந்தாமன் றன்மருகா
தஞ்சமெனத் துதித்தயெந்தன்
சங்கடந்தீர் திருச்செந்தூரா ஆண்டி

கதியுன்னை யன்றிவேறு
காப்பட்வர்கள் இங்கேயாறு
கதிர்காமந் தன்னில்வாழும்
கர்த்தனே கடைக்கண்பாரு ஆண்டி

சிரிப்பாக மயிலின்மீது
தெய்வானை வள்ளியோடு
திருப்பரங் கிரியில்வளர்
தேவர்கள் சேனாபதியே ஆண்டி

கன்றுமா னேந்துவோனின்
காதிலுப தேசிததவா
குன்றைக் குடிக்கும...
கோ... ...ில்...

25983



சிரிப்பாய்புர மெரித்தோன்
திருநுதலில் வந்தவனே
திருப்பேரரு ளமரவுமை
செங்கைவே லடைந்தவனே ஆண்டி

ஒருத்தனி கலிவாதன்
உலகில்கண் கண்டதெய்வம்
திருத்தணிகை சேவர்கொடி
சேந்தனேநின் றுதிவிரதம் ஆண்டி

தந்தையரும் மாங்கனியை
ஜல்தியில்முன் வாங்கவேண்டி
சிந்தைமகிழ்ந் தேயுலகை
சிகியிலேறி சுற்றிவந்த ஆண்டி

கானக்குறத்தி யின்மேல்
காதல்கொண்டு இங்கிதமாய்
வேணதினை மாவைத்தின்று
வேங்கைமர மாய்வளர்ந்த ஆண்டி

மிக்கபுகழ் பெருகும்
வேலாயுத குகனை
தங்கவரம் புகழ்
தாழ்பணிந்து சாற்றினேனே ஆண்டி

சுத்திசுத்தி அழைத்தும்
கார்ப்பதுன் கடமையென்றே
சித்தமிறங்காத தென்ன
சேவைதர வாரும்வோடி ஆண்டி

சழுகுமலையில் வாழும்
கந்தப்பா ஷண்முகனே
தொழுதேனே சுப்ரமணியன்
அன்பவினை போக்கவரும் ஆண்டி

சுப்பிரமணியர் தியானம் முற்றிற்று.

உ

குமரன் துணை.

# வள்ளிதெய்வானை ஏசல்.

## சுப்பிரமணியர் சமாதானம்.

விநாயகர்துதி.—வெண்பா

சீரோங்குந்தென்னாட்டிற் செழிக்குமயூரமலைப்
பேரோங்குமாறுமுகப் பெம்மான்றன்—நேரோங்கு
குஞ்சரிக்கும்கானக் குறத்தியற்குமேசல்சொலத்
தஞ்சம்விக்கினேசனிருதாள் போற்றி

(சரவடிச்சிந்து வர்ணமெட்டு)

தெய்வானை சொல்

ஆரடிசிறுக்கியெந்தன் நாயகன்பின்னால்வந்தவள்
அப்புரத்திலேவிலகி நில்லடி வெகு
மெய்ப்புடன்வந்தேறவர்தாய் சொல்லடி
ஆறுமாமுக வேலனென்துரை
பாகுவுந்தனை கூடினலிதில்
ஆகுவாயோநீயுயர்ந்த ஜாதியேவீட்டில்
ஒலைகாநுழையாதேகுறப் பேதையே

வள்ளிசொல்

ஜாதியையிழுத்தேயிங்கு பேதையே நீபேசுவது
தானுனக்குநல்லதல்ல பாரடி இனி
பானுளேமதிப்பதெங்கே கூறடி
சண்முகத்தொடு வந்தயெந்தனை
உண்மைசொல்லி புணர்ந்தகந்தனை
தள்ளிவிடுபாளழைத்துப் போகிறே எந்தன்
செல்வத்தந்தை தாய சேர்கி

தெய்வானை சொல் (இ

நானழைத்துபோவேனென்று தானுரைத்தசின்னஜா
நங்கையேயுன் நாவையறுப் பேனடி திருச்
செங்கைவேலனுக்குப்பெண்டு நானடி
நாழிகையொடு வேளைலக்கினம்
ராசியுந்திதி நாள் நக்ஷத்திரம்
நான்முகூர்தம்பார்த்துபொரிசிந்தினேன் அன்று
நானல்லோகிழக்குமுகங் குந்தினேன்

வள்ளி சொல்

கொட்டுமுழக்கோடுதாலிகட்டிகொண்டுவந்திருக்கும்
பட்டபுஸ்திரிகெட்டகேடு பாரடி தந்தை
கட்டிக்கொடுத்தான்வலியத் தோடி
கொச்சையென்பதும் லச்சையென்பதும்
சீச்சிகொஞ்சமும் வைவச்சிலாதவோர்
கொம்பனையேவார்த்தையென்ன தாங்கிநீ இங்கு
கூறவந்தாய்மெத்தமெத்த வோங்கிநீ

தெய்வானை சொல்

வார்த்தையென்னராங்கியென்றுபார்த்துமிகஏசாதடி
வைத்திடுவேன் கன்னமதில் முந்தியே வுன்
மானவெட்கம்ரெண்டுவிட்டு வந்தியே
வாக்கியமுங்கனயோக்கியமும்உந்தன்
பாக்யமுங்குடி சிலாக்கியமும்இந்த
வையகத்தோர்கண்டுசிரிப் பாரடி குறத்
தையலேபலரும்நகைப் பாரடி

வள்ளி சொல்

கண்டுசிறிப்பாரெனவே ஒண்டொடியேசொல்லவந்தா
விண்டலத்தில்வாழுந்தந்தை கேளடி ஐயோ
பண்டுசூரபத்தனு லங்காளடி
கனகபொற்பிரி யதனைவிட்டுமே
தமணியக்கிரி முழையிலுற்றுமே
கண்ணீர்விட்டழுததண்டே மெள்ளவா நீங்கள்
தன் [illegible]க்கன்றக் [illegible]னைச் சொல்லவா

175983

தெய்வானை சொல் (தையேகேள்
தண்ணிக்கன் றலைந்தோமென்று சொன்னகுறப் பே
தஞ்சமென்றுவாசலில்நின் றஞ்சியே பழங்
கஞ்சிகூழ்வாராச்சியென்று கெஞ்சியே
சாப்பிடுங்கறி போட்டிடுமிலை
நோட்படுஞ்சுறைக் கூட்டில்ரொப்பியே
தானேதிங்குமற்பஜாதி யல்லடிகாட்டுப்
பூனைதிங்கும் சேதிபொய்யோ சொல்லடி

வள்ளி சொல்

சூரனோடுசிங்கமுகன் தாருகனுன்றந்தைதன்னைத்
தோகையேவிரட்டிவிட வில்லையா உந்தன்
சொந்தேவர்மீன்சுமந்து வல்லையா
தொட்டது சிறைபட்டதும்அடி
பட்டதும்வுதை பட்டதும்வாயாற்
சொல்வதற்குவெட்கமாகத் தோணுதே யெந்த
னுள்ளமுமுரைக்கமிக நாணுதே

தெய்வானை சொல் (தாய்
வெட்கமாகத்தோணுதென்றுபக்குவமாய்சொல்ல வக்
வேறெக்கெதியுங்களுக்கே ஏதடிஎங்குந்
தேர்திருவிழாவில்வந்து பாரடி
மெத்தவுஞ்சன முற்றகும்பலில்
வைத்திருக்குமோர் கத்திரிக்கோலில்
மேனுமேமணியறுப்பீர் பாரடி அந்த
போலீசார்பிடித்துதைப்பார் தேறடி

வள்ளி சொல்

போலீசார்பிடித்துதைக்குஞ்சாதியென்றிகழ்ச்சி பேசு
வேலையற்றசக்களத்தி போடிபோபெருஞ்
ஜாலமுற்றவிட்புலைச்சி வாடிவா
புன்சடைப்பய மஞ்சுதற்குறு
வஞ்சியென்னீ மிஞ்சுறுயடி
குஞ்சரமளித்தபெண்ணீ பல்லவாயானும்
பஞ்சரக்கிளியென்பது மெல்லவ

தெய்வானை சொல்

பஞ்சரக்கிளியென்பதாய் மிஞ்சமிஞ்சபேசாதடி
பட்டியேயுன் மனம்வெட்கம் போமடி நீங்கள்
கட்டுவதுகூடைமுற மாமடி
பானைசட்டிபை கூடைமீதினி
லேயெடுத்து மெல்லோருமாய்திரி
பானவிழிபைக்குறத்தி ரியடி யொரு
மான்வயிற்றிலேயுதித்த சேயடி

வள்ளி சொல் (சாதடி

பைங்குறத்தி யென்றுயென்னை லொங்கலொங்க பே
அங்குவந்தேன் உன்புருஷன்றாழ்ந்தனர் எந்தன்
பங்கயப்பதத்திலேயண்டி வீழ்ந்தனர்
அழகுதன்னிலே எனக்குத்துடியோ
உலகிலுனக்குநான் களைத்தகுடியோ
அண்டையிலேவந்துவந்து வோடுறாய் எந்தன்
கொண்டைமயிர்மீதுகையைப்போடுறாய்

தெய்வானை சொல் (டேனிதோ

கொண்டைமயிர்மீது கையைக் கொண்டுவந்துபோட்
கூப்பிட்டிநின்சலிகை காரனை யந்த
கோழியங்கொடிதரித்த வீரனை
கொண்டவன்மனைக் கின்றுநீவாக்
கொண்ட தைரிய நன்றுநன்றடி
கூத்தியாளுக்கவ்வளவு செல்லுமா வெகு
நேர்த்திநேர்த்தியுந்தன்ஞாயம் வெல்லுமா

வள்ளி சொல்

கூத்தியார்க்குஅவ்வளவாவார்த்தையென்றுஎந்தனிட
கொண்டையிற்கைபோடும்படியாச்சுதா மலை
குன்றில்வாழ்குறவர்தும்பு போச்சுதா
குகனேவோகோசண் முகனேயுமையவள்
மகனேசரவண பவனேயிந்தக்
கோலமெனைசெய்யவெண்ணங்கொண்டீரே
நீலம[illegible]ிவந்து நின்றீரே

தெய்வானை சொல்

நீலமயிலேறும்வடி வேலனையழைக்கிறாயுன்
நெஞ்சிலுப்பைவைத்துசுடு வேணடியார்க்கு
பஞ்சிடாத பெரியசாமி நானடி
நில்லுமெதிர்வரச் சொல்லுமெனைபேச
சொல்லுநின்மொழி செல்லுஞ் செல்லும்
ஞாயமென்னசாட்சியென்ன வைக்குறாய் எந்த
நாச்சியாள்வீட்டினில்வந்து நிற்குறாய்

சுப்பிரமண்யர் தெய்வானைக்குச் சொல்லல்

தேவராஜன்பெற்றெடுத்த கோவையிதழ்ப்பசுங்கிளியே
சித்தந்திறயவுவைத்துக் கேளடி யெந்தன்
புத்திகெட்டனைந்திட்டாலும் பாரடி
சேலைதப்பவும் வேலைசெய்யவும்
மாலைகட்டவும் ஆளொருத்தியை
சேர்த்துவந்தாரென்றுஎண்ணிக்கொள்ளடி யெனை
பார்த்தவர்சிரிப்பாரிதைத் தள்ளடி

தெய்வானை சொல்

பார்த்தவர் சிரிப்பாரென்று வார்த்தைசொல்ல வந்தீர்
பானைசட்டியைத்தொடவும் யோக்யமா மிக்க
நாணயமாய்ப்பேசவந்தீர் சிலாக்யமா
பரனேபன்னிரு கரனேகுக்குட
தரனேசரவண பவனே இவள்
பட்டினாத்திலெச்சில்நக்குஞ்ஜாதியை நாமும்
தொட்டுக்கொள்ளவென்னவுண்டுநீதியே

சுப்பிரமணியர் சொல் (ய்வேன்

தொட்டுக்கொள்ளநீதியில்லை விட்டாலுநானென்னசெ
பட்டுக்கொண்டேன்ங்கேயினிபோகுவேன் அவளை
விட்டுவிட்டாலிப்பொழுதே சாகுவேன்
சொல்லுமென்னிட வார்த்தைநம்பிடு
கோதையேவொரு கோடிகும்பிடு
தன்பத்திமேயென்னைவிட டிடாத
கும்புவந்தாலேசிலே

சுப்பிரமணியர் வள்ளிக்குச் சொல்லுதல்

செந்தினைபுனத்துவேடர் சுந்தரத்துடன்வளர்த்த
தேன்மொழியே கேளாயொரு வாக்கியம் எல்லாந
தானேயவள்கொண்டுவந்த பாக்கியம்
தேவராஜனைன் மாமனுரிதை
யேதெரிந்திடில் கோபமாகுவர்
செப்புகின்றேனென்றுமொன்று மாகாது அவள்
சேவடிக்குக்கும்பிடுவீண் போகாது.

வள்ளி சொல்

இப்படிக்கொத்தயுந்தன் தப்பிலித்தனத்தைகண்டால்
யானுமுந்தன்பின்னேவரமாட்டேனே இவளால்
மானம்போகும்வார்த்தையெல்லாங்கேட்டேனே
என்னசெய்குவே னண்ணாமார்கள்நீ
சொன்னசொல்லினை யுண்மைகொண்டிட
ஏதேனுந்தான்மந்திரித்துப் போட்டீரோ வந்தால்
காதறுத்துக்கூத்துப்பார்க்க மாட்டாரோ

காதறுத்துக்கூத்துப்பார்க்கும் ஜாதியில்வந்து பிறந்த
கண்மணியேகோபம்வைத் திடாதடிநானும்
என்னசெய்வேன் இந்தவேளையோதடி
உன்காலிலாகிலும் நானும்விழுகிறேன்
பாரு அவள்பணக் காரன்மகளடி
காரியத்தைநீமுடித்துக் கொள்ளடி வீட்டில்
யேறிக்கொண்டுவெளியே அவளைத்தள்ளடி

சந்தநாதன் இந்தவிதம் சொல்லவே தேவசேனை
காலிலேவிழுந்தாள்குற வள்ளியும் கண்டு
மேலும்மேலும்வாழ்த்தினளம்மெள்ளியும்
கார்த்திகேயனும் சேர்த்தியாயிதைப்
பார்த்துசந்தோஷ வார்த்தைபேசியே
கைகொட்டிசிறித்துநின்றார் கேளுமேபாலக்
கவிம்மைராமசுவாமிசொற் போலுமே.

முற்றிற்று.

மஞ்சுளிகர் குந்தளமின்னே என்ற வர்ணமெட்டு

பல்லவி

தாவடந்தங் தென்னைவிடடி பண்டாரமான
ஷண்முகவே லவனுடி.

அனுபல்லவி

மாவடியை யேகிவந்து வள்ளியை மணம்புரிந்து
தேவரடியாளேயானும் சிவசுப்ரமண்யனுடி தா

சரணங்கள்

குங்குமம் சவ்வாதுபொட்டுக்கும்—குமுகுமென்ற
கொச்சிமஞ்சள் வாடை வீச்சுக்கும்
மங்கையேநீ வள்ளியைப்போல்
வல்லமையுனக்குண்டானல்
என் கைவேலிதை யீடுவைத்திதோ
இரண்டுபவுன் வாங்கித்தருகிறேன் தா

வெள்ளியுமுதையமாச்சுதே—அடியாளான
வள்ளிதேடும் வேளையாச்சுதே
அள்ளியே விபூதிதாரேன்
அடியே சுப்மாவிடடி
தெள்ளுதமிழுக்குதவும்
திருச்செந்தூர் வேலன்யானடி தா

ஆரபாரம் சேவல்கூவுதே—திருவனந்தல்
ஆரம்பூணும் நேரமாகுதே
கோவில் திருக்காப்புக்குக்
குருக்கள்வந் திருமுன்னே
ஆருமறியாதபடிக்கு
சேரவேணும் பள்ளியறை தா

—

175983

